**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28.04.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பாரதப் பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம்**

**சிறுதானிய பயிர் சாகுபடியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்**

தேசிய அளவில் சிறுதானிய பயிர் சாகுபடியின் பரப்பளவு மற்றும் உற்பத்தி குறைந்து வருவதை நிவர்த்தி செய்ய மக்கள் செல்வாக்கு மிக்க ஒருவரின் ஆதரவு தேவைப்பட்ட நேரத்தில் மாண்புமிகு பாரத பிரதமரின் மனதின் குரல் (Mann Ki Baat) நிகழ்ச்சி ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

மனதின் குரல் நிகழ்ச்சியின் இரண்டு முக்கிய அத்தியாயங்கள் ஊட்டச்சத்து பாதுகாப்பை அடைவதற்காக சிறுதானிய பயிர் சாகுபடிக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்தன. ஆகஸ்ட் 28, 2022 அன்று இடம்பெற்ற மனதின் குரல் நிகழ்ச்சியின் 92 வது அத்தியாயம் ஊட்டச்சத்து பாதுகாப்பு, சர்வதேச சிறுதானிய ஆண்டு மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு சிறுதானிய உணவின் நன்மைகள் பற்றியும் ஜனவரி 29, 2023 அன்று இடம் பெற்ற மனதின் குரல் 97 வது நிகழ்ச்சி சிறுதானிய சாகுபடி , மதிப்புக் கூட்டல் மற்றும் சிறுதானிய தொழில் முனைவோர் ஆகியவற்றைப் பற்றியும் விரிவாக இருந்தது.

இத்தகைய சூழலில், மனதின் குரல் போன்ற மக்கள் செல்வாக்கு மிக்க நிகழ்ச்சி, சிறுதானிய சாகுபடியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது, நிகழ்ச்சிக்குப் பின் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் சிறுதானிய சாகுபடிக்கு எத்தகைய ஆதரவளித்தன என்பது குறித்து சிறுதானிய விவசாயிகளின் கருத்தை மதிப்பிடுவதற்காக இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் தெலுங்கானா ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவின் 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 68 மாவட்டங்களின் 1236 சிறுதானிய விவசாயிகள் மற்றும் 68 வேளாண்மை அறிவியல் நிலைய நிபுணர்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர்.

**மனதின் குரல் – வேளாண்மையில் தாக்கம்**

மனதின் குரல் நிகழ்ச்சிக்குப்பின் சுமார் 88 சதவீத வேளாண்மை அறிவியல் நிலையங்கள், நிகழ்ச்சி தொடர்பான மேல்நடவடிக்கைகளை மேற்கொண்டன என்றும், மனதின் குரல் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக , 60 சதவீத விவசாயிகள் 15 கி.மீக்கு மேல் பயணம் செய்ததாகவும் முடிவுகள் தெரிவிக்கின்றன.

சிறுதானியம் சாகுபடி செய்யும் விவசாயிகளில் , 53 சதவீதம் பேர் குறைந்தது ஐந்து மனதின் குரல் நிகழ்ச்சிகளைக் கேட்டுள்ளனர், மனதின் குரல் இனி நகர்ப்புறம் சார்ந்த நிகழ்ச்சி அல்ல , மாறாக சிறு குறு விவசாயிகளை நேரடியாக சென்றடையும் நிகழ்ச்சி என்பது தெரிகின்றது.

சிறுதானிய விவசாயிகள் மற்றும் நுகர்வோர் மத்தியில் மனதின் குரல் நிகழ்ச்சியை விளம்பரப்படுத்துவதில் பெருந்திரள் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் முக்கிய பங்கு வகித்தன , அதே நேரத்தில் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மனதின் குரல் நிகழ்ச்சியின் போதும் அதற்குப் பிறகும் சிறுதானிய விவசாயிகளுக்கு அறிவுசார் ஆதரவை வழங்கின.

**மனதின் குரல் – சிறுதானிய விவசாயிகளின் கருத்துக்கள்**

மாண்புமிகு பாரத பிரதமரின் பேச்சால் ஈர்க்கப்பட்ட விவசாயிகள் , இந்தியாவில் சிறுதானிய சாகுபடியை மேம்படுத்த கீழ்க்கண்ட தங்களின் முக்கியமான கருத்துக்களையும் வழங்கினர்.

- சிறுதானிய விவசாயிகள் நாற்றங்கால் முறையை பின்பற்றுவதை துரிதப்படுத்தல்
- மேம்படுத்தப்பட்ட சிறுதானிய இரகங்களை ஏற்றுக்கொள்ளுதல் ; வரிசை விதைப்பை பின்பற்றுதல்
- வரிசை நடவில் சிறுதானியங்களுக்கிடையே துவரையை ஊடுபயிராக பயிரிடுதல்
- கேழ்வரகு மற்றும் வரகு போன்ற சிறுதானிய பயிர்களை பயிரிடுதல்

- சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ளுதல்
- நல்ல ஊட்டச்சத்து மற்றும் அதிக தேவையுள்ள கம்பு பயிரின் சாகுபடி பரப்பளவை அதிகரித்தல்
- ஆண்டுக்கு ஒரு பருவத்தில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டும் சிறுதானியங்களை இரு பருவத்திலும் சாகுபடி செய்தல்
- தொடர் பயிர் சாகுபடிக்கேற்ற இரகங்களை தேர்ந்தெடுத்தல்
- மரபு சாரா பகுதிகளிலும் வணிக ரீதியாக சிறுதானியங்களை பயிரிடுதல்
- இயற்கை விவசாய முறையில் சிறுதானிய சாகுபடி
- சிறுதானிய பரப்பளவை விரிவுபடுத்துதல்
- சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களில் புதிய மாற்றங்களை புகுத்துதல்
- உயிர்ச்செறிவூட்டப்பட்ட கம்பு இரகத்தை பயிரிடுதல் மற்றும் ஊக்குவித்தல்
- சிறுதானியங்களை அரசு கொள்முதல் செய்ய வழிமுறைகளை ஏற்படுத்துதல்
- வரும் ஆண்டுகளில் சிறந்த மற்றும் சாதகமான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்

இந்த ஆய்வின் முடிவுகள், மனதின் குரல் நிகழ்ச்சிகள் சிறுதானிய விவசாயிகள் மற்றும் நுகர்வோரிடையே கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காட்டுகின்றது.

மேம்படுத்தப்பட்ட சிறுதானிய இரகங்களை விவசாயிகள் ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வலுப்பட்டுள்ளது மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் முனைவோருக்கு உகந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆய்வில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் , உள்நாட்டிலும், உலக அளவிலும் மாறிவரும் விவசாய சூழ்நிலைகளுக்கு ஏற்ப, சிறுதானிய சாகுபடியை மேலும் ஊக்குவிக்க உதவும்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*